சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 298/2009

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 21.08.2024

வாசா 1(செல்வி)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தீரன் சின்னமலை பைனான்ஸ் கொல்லம்பாளையத்தில் யார் யார் பங்குதாரர்கள் என்றால் அப்படி ஒரு பைனான்சே கிடையாது. என் கணவர் சதாசிவம் மேற்படி தீரன் சின்னமலை பைனான்ஸ் , பதிவு எண் 46/2005 , 51 விக்னேஷ் காம்ளக்ஸ், பிரப் ரோடு, ஈரோடு என்ற முகவரியில் உள்ள பைனான்ஸ் நிறுவனத்தில் என்ன பொறுப்பில் இருந்தார் என்றால் அவருக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை, அப்படி ஒரு பைனான்சே இல்லை. நானும் என் கணவரும் மனித உரிமை அமைப்பில் பொறுப்பில் இருந்தோமா என்றால் நான் பொறுப்பில் இல்லை,என் கணவர் இருந்தாரா என்று எனக்கு தெரியவில்லை. நாங்கள் என்ன தொழில் செய்கிறோம் என்று எனது வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலேரா சொல்லியுள்ளேனா என்றால் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக குறிப்பிட்டுள்ளேன். 2000 காலகட்டத்தில் நானும் என்கணவரும் வருமான வரி கட்டியுள்ளோமா என்றால் ஆமாம். வருமான வரி கணக்கில் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள பண பரிவர்தனை பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து உள்ள பகுதியில் 1,2 பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ள சொத்து இருக்கும் பகுதி 1,2 பிரதிவாதிகள் மட்டும் தான் தாழ்தப்பட்ட சமூகத்தினர் என்றும், மற்றவர்கள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரி. தாவா சொத்தில் உள்ள சர்வே எண் 469/2 பு.ெஉற 4.53.5 ல் மொத்த விஸ்தீரணமும் பாகம் பிரிக்காமல் உள்ளது என்றால் சரியல்ல, பட்டா கூட்டு பட்டாவாக உள்ளது, ஆனால் நாங்கள் 1 ஏக்கர் 14 சென்ட் தனியாக தான் கிரயம் பெற்றுள்ளோம். பொதுவாக ஒரு சொத்தை கிரயம் வாங்கும் முன்பு வில்லங்கம் மற்றும் கைடு லைன் வால்யூ பார்ப்பது வழக்கம் என்றால் சரி. என் கணவர் சதாசிவத்தை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்கப் போகிறோமா என்றால் இல்லை. என் கணவர் கிரய ஒப்பந்தம் போட்டபோதோ கிரயம் செய்த கொண்டதாக

சொல்லும் போதோ வில்லங்கம் மற்றும் கைடு லைன் வால்யூ நகல் வாங்கி பார்த்தோமா என்றால் அக்ரிமெண்ட் சமயத்தில் வில்லங்கம் பார்த்தோம் அதன்பின் தான் கிரயம் செய்தோம். வில்லங்க நகல் பெற்று பார்த்தேனா என்றால் அது ஞாபகமில்லை. பொதுவாக தாவா சொத்து இருக்கும் பகுதியில் கடன் வாங்குபவர்களிடம் கடன் கொடுப்பவர்கள் சொத்து பத்திர அசலை வாங்கி வைப்பதும், செக்கியூரிட்டிக்காக கிரய ஒப்பந்தம் மற்றும் கிரய பத்திரம் எழுதி வாங்குவது வழக்கம் என்றால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை, சொத்தை விற்பதற்காக தான் ஒப்பந்தம் எழுதி தந்தார்கள், கிரயமும் செய்யப்பட்டது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வாதம் என்ன என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதி ஜேம்ஸ் மனைவி 1 ம் பிரதிவாதி செல்வமணிக்கு பக்கவாத நோய் பாதிக்கப்பட்டிருந்தபோது அவருக்கு பணம் தேவைப்பட்டதால் ரவி என்பவர் மூலம் அவர்கள் எங்களிடம் பணம் கடன் கேட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் கேட்டார் என்றும், 2 லட்சம் பணத்திற்கு ரூ.100 க்கு 4 % வட்டி தரவேண்டும் என்றும், சொத்து பத்திர அசலை தரவேண்டும் என்றும் பத்திரம் பதிவு செய்து தர வேண்டும என்றும் அது தவிர புரோநோட் எழுதி தரவேண்டும், அப்போது தான் கடன் தருவோம் என்று நாங்கள் சொல்லிவிட்டோம் என்றால சரியல்ல. அவ்வாறு கடன் கொடுத்ததற்காக தான் என் கணவர் பெயரில் வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் எழுதி பதிவு செய்து வாங்கினோம் என்றும், எங்கள் பைனான்சில் வேலை செய்யும் பூசப்பன் பெயருக்கு வாசாஆ 2 பவர் பத்திரம் எழுதி வாங்கி பதிவு செய்து கொண்டடோம் என்றால் சரியல்ல, பூசப்பன் எங்களுக்கு தெரிந்தவர் அல்ல, எங்களுக்கு பைனான்சும் கிடையாது. நாங்கள் எங்கள் பண பலத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி வசதியற்றவர்களுடன் பத்திரங்கள் பதிவு செய்து வாங்கி கடன் கொடுப்பதை வழக்கமாக வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் கடனாக வாங்கிய ரூ2 லட்சத்தை அவர்களின் பூர்வீக சொத்தை விற்று வட்டியுடன் சேர்த்து ரூ 2 லட்சத்து 80 ஆயிரம் திரும்ப செலுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் கடனாக பணம் எதுவும் வாங்கவில்லை, அவர்கள் பூர்வீக சொத்து விற்றது பற்றி எனக்கு தெரியாது. என் கணவரின் அலைபேசி எண் 9443034434 என்றால் சரி. நாங்கள் குடியிருந்த ரூடிஸ் காலனி வீட்டின் தொலைபேசி எண் 260561 என்றால் ஞாபகமில்லை. 25.10.2001 அன்று 2 ம் பிரதிவாதி ரூ 2 லட்சத்து 80 ஆயிரத்தை எங்கள் வீ்ட்டில் வைத்து திரும்ப செலத்தியபோது அதற்கு கணக்கு பார்த்து சொல்வதாக 05.01.2002 ம் தேதி 2 ம் பிரதிவாதியை என் வீட்டிற்கு வரவழைத்து என்கணவர் வரவு செலவு கணக்கு விவரத்தை எழுதி 25 ஆயிரம் ரூபாய் பாக்கி 2 ம் பிரதிவாதி செலுத்தவேண்டும் என்று எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல்

செய்த எதிர்வழக்குரைக்கு பதிலுறை என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியாக ஞாபகமில்லை, தாக்கல் செய்திருப்போம் என்று நினைக்கிறேன். 2000 ஆண்டு கால கட்டத்தில் தாவா சொத்து இருக்கும் பகுதி ஏக்கர் ஒன்றுக்கு 15 லட்சம் மதிப்பு இருந்தது என்றால் சரியல்ல. தற்போது அந்த சொத்தின் மதிப்பு ஏக்கர் ஒன்றிக்கு ஒரு கோடி ரூபாய் இருக்கும் என்றால் அவ்வளவு இருக்காது, சற்று குறைவாக தான் இருக்கும். கடனிற்காக செக்கியூரிட்டியாக எழுதி வாங்கிய பத்திரங்கள் என்பதால் தான் தாவா சொத்திற்கு வில்லங்க சான்று மற்றும் கைடு லைன் வால்யூ சான்று பெற்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரையில் தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளும் அவரின் வாரிசுகளும் தான் தொடர்ந்து அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும், வாசாஆ 3 தேதியிலோ அதன்பின்னிட்டோ நான் அந்த சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல, என் கிரய தேதி முதல் நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன். ஒரு பக்கம் வட்டி வாங்கி விட்டு, மறு பக்கம் செக்கியூரிட்டிக்காக பெற்ற ஆவணங்களை கொண்டு வாசாஆ 3 கிரய பத்திரம் என் பெயரில் பிரதிவாதிகளுக்கு தெரியாமலேயே மோசடியாக எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதை பயன்படுத்திக் கொண்டும் அவர்களுக்கு பணம் தேவைப்பட்டதை பயன்படுத்திக் கொண்டும் கடனிற்கு பணம் கொடுத்தபோது செக்கியூரிட்டிக்காக பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் எங்கள் வசதிக்கேற்ப பெற்றுக் கொண்டோம் என்றும், 2 ம் பிரதிவாதி பெற்ற கடனை திரும்ப பின்பு வரவு செலவு விவரம் என் கணவர் எழுதி கொடுத்தார் என்றும் இந்த விவரங்களை வேண்டுமென்ற மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் 2 ம் பிரதிவாதியிடம் ரூ.25000 பாக்கி இருக்கிறது என்று சொன்ன தொகையையும் 2 ம்பிரதிவாதி அவரின் பென்சன் பணத்தை பெற்று திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல, கடனே கிடையாது. ஒவ்வொரு முறையும் பத்திரத்தை ரத்து செய்து கேட்டபோது கணக்கு வழக்கு பார்த்து சொல்கிறேன் என்று காலம்தாழ்த்தி வந்தோம் என்றும் 2007 ம்ஆண்டு தான் நாங்கள் மோசடி செய்த விவரம் தெரிய வந்தது என்றால் சரியல்ல. 2007 ம் ஆண்டு பிரதிவாதிக்கு இந்த விவரம் தெரிந்த பின் தான் பிரதிவாதிகளை எங்கள் ஆள்பலன் மற்றும் செல்வாக்கை பயன்படுத்தி பலவந்தமாக தாவா சொத்திலிருந்து அப்புறப்படுத்தினோம் என்றால் சரியல்ல. மோசடி கிரயத்தை பயன்படுத்தி பிரதிவாதிகளுக்கு தெரியாமல் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. விவரம் தெரிந்து பிரதிவாதிகள் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தபோது தான் கேவியேட் மனு தாக்கல் செய்து இந்த வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல, அவர்கள் கூடுதல் பணம் கேட்டதால் தான் இந்த வழக்கு

தாக்கல் செய்யப்பட்டது. கடனிற்காக பெற்றுக் கொண்ட செக்கியூரிட்டி ஆவணங்கள் என்பதாலும், அந்த கடனை திரும்ப செலுத்தி விட்டதாலும் அந்த செக்கியூரிட்டி ஆவணங்கள் அடிப்படையில் பின்னிட்டு நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட எந்த ஆவணங்களும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. செக்கியூரிட்டி ஆவணங்களை ரத்து செய்து அசல் சொத்து பத்திரங்களை திரும்ப தரவேண்டியது எனது கடமை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 21.8.24.
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS